**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 40/2018

**வா.சா.1**

**திரு. சந்திரசேகரன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 1, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் )**

நான் எம்பிஏ படித்துள்ளேன். நான் தனியார் கம்பெனியில் பார்மஸிஸ்டாக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் தானசெட்டில்மெண்ட் மூலமாக எழுதி வைத்த சொத்தானது எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கேட்டுள்ளோம். யாரருக்கு எதிராக தாக்ல செய்துள்ளோம் என்றால் அம்மாசையம்மாள், நடராஜ், தங்காயாள், செல்வராசு சுந்தரமூர்த்தி, ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளோம். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். வழக்கு ஆவணங்களில் மற்றும் அதில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். அம்மாசையம்மாள் தாககல் செய்துள்ள எதிர்வழக்குரை விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். 4, 5 பிரதிவாதிகளின் தந்தைவழி தாத்தா கருப்பகவுண்டர் என்றால் சரிதான். மேற்படி கருப்பகவுண்டர் கோபி மாவட்ட

உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 503/1984 ல் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான் கேள்விப்பட்டுள்ளேன். அதே வழக்கில் இ.ம.எண். 1568/1994 தாக்கல் செய்து ஒரு சமரச உடன்படிக்கை பதிவு செய்ய தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல 1987 ஆம் ஆண்டு அனைத்து தரப்பினர்களையும் சேர்க்கவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது. நான்சொல்வது தவறு என்றும், மேற்படி சமரச உடன்படிக்கையின் அடிப்படையில் தான் என் தந்தையும், கருப்பகவுண்டரும், சின்னையகவுண்டர் என்பவரும் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் இல்லை. வாய்மொழியாக பிரித்துக்கொண்டார்கள். மேற்படி சமரச உடன்படிக்கையின்படி சின்னையகவுண்டருக்கு 1.40 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் இல்லை. தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கிற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் பெரியவர்கள் மற்றும் பஞ்சாயத்தார்கள் பேசியதன் அடிப்படையில் சமரசமாக போய்விட்டதால் மேல்முறையீடு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எதற்காக கோபி சார்பு நீதிமன்றத்தல் என் தகப்பனார் அ.வ.எண். 27/1997 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் 1987 ம் ஆண்டு வாய்மொழியாக பிரித்துக்கொண்ட சொத்தை அல்லாமல் எங்களுக்கு பாத்தியப்பட்ட வேறு ஒரு சொத்தை விற்பனை செய்யப்பட்டதால் அந்த வழக்கை தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் நகலை வா.சா..ஆ.7 ஆக குறியீடுசெய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சின்னைகவுண்டர் தரப்பில் தாக்ல செய்துள்ள எதிர்வழக்குரையில் 06-12-1995 ல் 3 ம் பிரதிவாதிக்கு 65 செண்ட் பூமியை கிரையம் செய்துகொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி

சின்னையகவுண்டர் 29-01-1999 ல் 1, 2 பிரதிவாதிகள் பெயரில் 60 செண்ட் நிலத்தை கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் ஆமாம் செக்குபந்தி தவறாக குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுத்தார். வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தின்படியும், கோபி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண். 503/84, I.A.No. 1568/1984 தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களிலிருந்து கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு தான் சொல்லியுள்ளார். I.A.No. 1568/1984 ல் பிறப்பிக்கப்பட்ட சமரச தீர்ப்பு எங்களை கட்டுப்படுத்தாது என்றோ அது தவறானது என்றோ மேல்முறையீடு எதுவும் தாக்கல செய்யவில்லை என்றால் வாய்மொழியாக சொத்துக்களை பிரித்துக்கொண்டதால் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் செக்குபந்திகள் தவறானது என்றோ, கிரையங்கள் செல்லாது, எங்களை கட்டுப்படுத்தாது என்றோ பரிகாரங்கள் கேட்கவில்லை என்றால் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி பரிகாரத்திற்காக நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் 30 ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்டவை என்பதால் அந்த ஆவணங்களைப் பொறுத்து நாங்கள் எந்த பரிகாரமும் கேட்க இயலாது, எங்களது பரிகாரங்கள் அனைத்தும் காலவரையறைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 23-01-2004 ல் என் தந்தை தாக்கல் செய்த அ..வ.எண். 77/1997 வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி அ..வ.எண். 77/1997 வழக்கில் வரதராஜன், சாமியப்பன், ரங்கசாமி, சண்முகம்மாள், பழனியப்ப ஆசாரி, ராமசாமி ஆகியோர்களுக்கு என் தந்தை வழி தாத்தா கருப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட ஆவணத்தை பொறுத்துதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. அ..வ.எண்.

77/1997 வழக்கில் கருப்பகவுண்டர் கிரையம் செய்த சொத்துக்கள் வீட்டுமனைகளாக பிரித்து விற்பனைசெய்துள்ளதால் தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறு. மேற்படி கிரையதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை அவ்வாறு கிரையம் எதுவும் நடக்கவில்லை என்பதால் சேர்க்கவில்லை. 2004 ம் ஆண்டு பஞ்சாயத்து நடந்ததாக கூறும்நிலையில் யார் யார் முன்னிலையில் பஞ்சாயத்து நடந்தது, தேதி என்ன என்ற விபரங்களை, வழக்குரையிலும், முதல்விசாரணை சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான் மாதம் மட்டும் குறிப்பிட்டுள்ளோம் யார் யார் கலந்துகொண்டார்கள் என்று சொல்லவில்லை. வழக்கில் வாய்மொழியாக பிரித்துகொண்டு அனுபவித்து வருவதை ஏற்றுக்கொள்வதாக முடிவு செய்யப்பட்டது என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். வாய்மொழி பாகப்பிரிவினை எப்போது , யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு எப்போது ஏற்பட்டது என்றால் 2004 ஜுன் மாதத்தில்நடந்தது. யார் யாருக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. கருப்பகவுண்டர் தாக்கல் செய்த அவ.எண். 503/1984 வழக்கில் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். சமரச உடன்படிக்கையின்படி 1984 ம் ஆண்டு அவரவர்களுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அவ்வாறு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். என் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடியான பின்னிட்டு ஜுன் 2004 ல் ஒரு பஞ்சாயத்து நடந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சமரச உடன்படிக்கையின்படி

சின்னையகவுண்டருக்கு 1.40 ஏக்கர் நிலம் 2 தாக்குகளாக ஒதுக்கப்பட்டது என்றால் தவறு. அதனால் தான் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம்செய்து கொடுத்த சமயத்தில் தனக்கு மீதமுள்ள பூமிக்கு மேற்கே என்று செக்குபந்தி காண்பித்து கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லும் என்பதால் சின்னையகவுண்டருக்கு தான் விற்பனை செய்ததுபோக மேலும் 15 செண்ட் நிலம் மீதமுள்ளது என்றால் தவறு. அ.வ.எண். 77/1997 வழக்கில் சின்னையகவுண்டர் தாவா சொத்தில் 60 செண்ட் பூமியை அம்மாசையக்காள், தங்காயாள் ஆகியோர்களுக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டு ரூ.5 ஆயிரம் செலவில் ஓட்டுசாளையும் அமைத்துக்கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளது ஆனால் அது எங்களது சொத்து. அவ்வாறு அந்தசொத்து எங்களுக்கு பாத்தியம் என்று காண்பிக்க ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால்ஆவணங்கள் உள்ளது. பிரதிவாதிகள் கட்டிய வீட்டை எங்களது வீடு என்று தவறாக கோரிக்கை விடுக்கிறேன் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் 29-01-1997 தேதி கிரையப்பத்திரத்தின்படி அம்மாசையக்காள், தங்காயாள் ஆகியோர்களுக்கு சின்னைகவுண்டர் கிரையம் செய்துகொடுத்த 60 செண்ட் நிலத்தில் அருணாச்சலம் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தகப்பனார் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உட்பிரிவுகள் அனைத்தையும் வருவாய் கோட்டாட்சியர் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் மூல ஆவணங்களை

வைத்து முறைப்படி பதிவுசெய்யவில்லைஎன்று காரணம் கூறியுள்ளார் என்றால் தவறு. சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்துள்ள பூமிக்கு தவறாக விளம்புகை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் 17-08-2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 17-08-2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் பு.ஏ. 1.26 பூமிக்கு செக்குபந்தி குறிப்பிட்டு அதில் மனையிடத்திற்கு என்று விடப்பட்ட இடம், 1.1/2 செண்ட் நீங்கலாக 1.26 ¼ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 1.1/2 செண்ட் நிலத்திற்கு செக்குபந்தி சொல்லவில்லை என்றால் மேற்படி 1.1/2 செண்ட் நிலமானது 1.26 ¼ ஏக்கர் நிலத்திற்குள் வருவதால் தனியாக செக்குபந்தி காண்பிக்கவில்லை. 1.26 ¼ ஏக்கர் நிலத்தில் 1.1/2 செண்ட் நிலம் எந்த பகுதியில் உள்ளது என்று சொல்லவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. 3 ம் அயிட்ட சொத்தான வீட்டிற்கு கதவு எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ல் வட்டாட்சியர் வழங்கிய அனுபவ சான்றில் 1.26 ¼ ஏக்கர் பூமிக்கு செக்குபந்தி சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார்தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கு 2004 ம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால் வருவாய் வட்டாட்சியர் கொடுத்த வா.சா.ஆ.6 செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஏற்கனவே தாவா சொத்தை பொறுத்து சொத்தின் தரப்பினர்களுக்கு இடையே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் தரப்பினர்கள் ஏற்றுக்கொண்ட நிலையில் அதே வழக்கு சொத்தை பொறுத்து அதே தரப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இநத வழக்கிலும்

அவசியமான தரப்பினர்களை சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.